AUM HARRY

# G.C.E (A/L)

# கணக்கீடு

## மீட்டல் வினாவிடை

K. SRI B. Com (Hons)

வெளியீடு
ஸ்ரீ சாந் உயர்கல்விச் சேவை பதிப்பகம்
50/2, சென் அந்தனிஸ் வீதி,
நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**01.** அ. 1990 ஆம் மார்ச் 31ம் திகதியன்று கோபாலன் அவர்களின் சொத்துக்களும் பரிப்புகளும் பின்வருமாறு அமைந்திருந்தன.

| | | |
|---|---|---|
| கைவசமுள்ள காசு | | 10,600 |
| வங்கி நடைமுறை க/கு | | 130,000 |
| கடன்பட்டோர் | பாலச்சந்திரன் | 45,000 |
| | கணபதி | 34,000 |
| கையிருப்பில் உள்ள தொக்கு | | 160,000 |
| காணியும் கட்டடங்களும் | | 250,000 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | | 80,000 |
| மோட்டார் வான் | | 160,000 |
| கடன் கொடுத்தோர் | ஜீவன் | 10,000 |
| | வசந்தி | 15,000 |

ஏப்ரல் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1990 ஏப்ரல்**

02 பாலச்சந்திரனுக்கு கடன் அடிப்படையில் விற்ற பண்டங்கள்
100 மூடைகள் மிளகாய் ஒவ்வொன்றும் 500 ரூபா வீதம்
50 மூடைகள் வெங்காயம் ஒவ்வொன்றும் 400 ரூபா வீதம்
75 பெட்டிகள் உருளைக்கிழங்கு ஒவ்வொன்றும் 450 ரூபா வீதம்
அனுமதிக்கப்பட்ட கழிவு 5 வீதம்.

03 ஜீவனுக்கும் வசந்திக்கும் சேர வேண்டிய தொகைகள் காசோலைகள் மூலம் செலுத்தப்பட்டன பெற்ற கழிவீடு 2 சதவீதம்.

04 சில்லறை காசாளருக்கு முற்பணமாக 1000 ரூபா காசு கொடுக்கப்பட்டது.

05 ஜீவனிடமிருந்து கடனுக்கு பெற்றது
50 பெட்டிகள் உருளைக்கிழங்கு ஒவ்வொன்றும் 300 ரூபா வீதம்.
100 மூடைகள் மிளகாய் ஒவ்வொன்றும் 300 ரூபா வீதம்.
50 மூடைகள் வெங்காயம் ஒவ்வொன்றும் 200 ரூபா வீதம் பெற்ற கழிவீடு 5 சதவீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 தான் விற்ற பண்டங்களுக்காக ஜீவன் மாற்றுண்டியல்களை வழங்கினார். அவை கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

07 காசு விற்பனைகள் - 15,000 ரூபா

09 பாலச்சந்திரன் சேதமடைந்த பண்டங்களைத் திருப்பி அனுப்பினார். அவருக்கு 1,500 ரூபா கடன் அனுமதிப்பதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

10 சென்ற மாதத்திற்கான மின்சார உண்டியல் தொகையான ரூபா 850 ரூபா காசாகக் கொடுக்கப்பட்டது.

11 சில்லறை காசு செலவுகள்.
அனுப்புஞ்செலவு 200 ரூபா அஞ்சற் செலவும் முத்திரையும் 150 ரூபா தந்திகள் 35 ரூபா பொதி செய்யும் கட்டணம் 240 ரூபா

15 தளபாடம் வாங்கப்பட்டது. அதற்கென 15,000 ரூபாய்க்கு காசோலை ஒன்று வழங்கப்பட்டது.

16 காசோலை ஒன்றை கொடுத்து பாலச்சந்திரன் தனது கணக்கைத் தீர்த்து கொண்டார். அனுமதிக்கப்பட்ட கழிவீடு 5 சதவீதம்.

18 காசு விற்பனைகள் - 12,000

20 சொந்த செலவுக்காக 1,200 ரூபா காசு எடுக்கப்பட்டது.

22 2,500 ரூபா காசு நிலுவையாக வைத்துக் கொண்டு எஞ்சிய பணம் வங்கியிற் வைப்புச் செய்யப்பட்டது.

25 3,000 ரூபா வாடகைப்பணம் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

28 சில்லறைக் காசு செலவுகள்.
எண்ணெய் 40 ரூபா விளம்பரம் 250 ரூபா
இம் மாதத்திற்கான சில்லறைக் காசு செலவுகள் மீள நிரப்பல் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 திரு. ரணவீர ஒரு பங்காளராக ஏற்றுக்கொள்ளப்பட்டார் அவர் கொணர்ந்த சொத்துக்களும் பரிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பொறிவிருட்சமும் பொறிகளும் | 150,000 |
| தளபாடம் | 69,000 |
| நன்மதிப்பு | 80,000 |
| பண்டங்கள் | 150,000 |
| வருமதியான உண்டியல்கள் | 40,000 |
| கொடுப்பனவு செய்ததற்குரிய உண்டியல்கள் | 130,000 |

**நீர் பின்வருவனவற்றை தயாரிக்க வேண்டும்.**

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான

1. முதன்மைப் பதிவு ஏடுகள் (PRIME ENTRY BOOKS)
2. பேரேட்டுக் கணக்குகள்
3. 1990 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று இருந்தவாறான பரீட்சை நிலுவை.

02. துர்க்காவும் வாமனும் தாம் தனித்தனியே நடாத்தி வந்த இரு வியாபாரங்களை ஒன்றிணைப்பதன் மூலம் "தூளாவான வியாபாரிகள்" என்ற பெயரில் 1990 ஏப்ரல் 01 ம் திகதி அன்று பங்குடமை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த இரு தனியுரிமை வியாபாரங்களினது சொத்துகளும் பரிப்புகளும் (பொறுப்புகளும்) கீழே தரப்பட்டுள்ள உடன்பாடு காணப்பட்ட பெறுமானங்களுக்கமைய புதிய பங்குடமை வியாபாரத்திற்கு மாற்றப்பட்டன.

| துர்க்காவின் வியாபாரம் | ரூபா | | வாமனின் வியாபாரம் ரூபா | |
|---|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 650,000 | | - | |
| மோட்டார் வாகனங்கள் | 89,000 | | -80,000 | |
| தளபாடமும் பொருத்துகளும் | 76,000 | | -70,000 | |
| தொக்குகள் | 70,000 | | -200,000 | |
| காசு | 30,000 | | -130,000 | |
| கடன் - மக்கள் வங்கி | | -450,000 | | - |
| வியாபார சென்மதியாளர் - ஜனதா | | -20,000 | | -80,000 |
| செலுத்த வேண்டிய வட்டி | | -45,000 | | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குடமை வியாபாரத்தின் ஏப்ரல் மாதத்திற் போதான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## ஏப்ரல்

2 நடப்பு (நடைமுறை)க் கணக்கொன்றிலே 150,000 ரூபா வைப்புச் செய்யப்பட்டது.

3 காசுக்கு விற்கப்பட்ட பொருட்கள் ரூபா 120,000 (வாங்குபவர் காசோலை ஒன்றைக் கொடுத்துள்ளார்)

4 முந்தியன்று கிடைக்கப்பெற்ற காசோலை வங்கியிலிடப்பட்டது. சில்லறை செலவுக்கெனச் சிறு செலவுக் காசாளருக்கு முற்பணமாகக் கொடுத்தகாசு ரூபா 1000
சிறு செலவு காசு கொடுப்பனவுகள்
அஞ்சற் செலவு ரூபா 120
உட்சுமைக் கூலி ரூபா 300
எழுது கருவிவகை ரூபா 200

5 கடனுக்கு விற்கப்பட்ட பண்டங்கள்
பீ.பீ ஹேமபாலாவுக்கு (விட்ட கழிவீடு 5%)
ஒவ்வொன்றும் 400 ரூபாவான 100 கதிரைகள்
ஒவ்வொன்றும் 750 ரூபாவான 50 மேசைகள்
ஒவ்வொன்றும் 800 ரூபாவான 10 கட்டில்கள்

அமரதாச அத்து கோரலவுக்கு,
ஒவ்வொன்றும் 400 ரூபாவான 70 கதிரைகள்
ஒவ்வொன்றும் 750 ரூபாவான 30 மேசை
ஒவ்வொன்றும் 800 ரூபாவான 10 கட்டில்

8 ஹேமபால, அமரதாச அத்துகோரல என்பவரிடமிருந்து வருமதியுள்ள தொகைக்கு அவர்கள் பேரில் 03 மாதங்களில் கொடுபட வேண்டிய இரு மாற்றுண்டியல்கள் வரையப்பட்டன. அதே நாளில் இம் மாற்றுண்டியல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 முந்திய மாதத்திற்கான மின் கட்டணங்கள் காசாக செலுத்தப்பட்டன.
துர்க்காவின் வியாபாரம் ரூபா 2,650
வாமனின் வியாபாரம் ரூபா 1,840

10 சிறு செலவுக் காசுக் கொடுப்பனவுகள்
விளம்பரம் ரூபா 250
அஞ்சற் செலவு ரூபா 120

11 கடன் கொள்வனவுகள்.
குரே அண்ட் கம்பனியிடமிருந்து
ஒவ்வொன்றும் 200 ரூபாவான 50 கதிரைகள்.
ஒவ்வொன்றும் 500 ரூபாவான 40 கதிரைகள்
ஒவ்வொன்றும் 500 ரூபாவான 60 கட்டில்கள்
பெற்ற கழிவீடு 5%

தீபதி அண்ட் கம்பனியிடமிருந்து
ஒவ்வொன்றும் 250 ரூபாவான 60 கதிரைகள்
ஒவ்வொன்றும் 500 ரூபாவான 30 கதிரைகள்
பெற்ற கழிவீடு 2%

12 குரே அன் கம்பனிக்கு சேர வேண்டிய தொகையைத் தீர்க்கும் பொருட்டு மூன்று மாதத்துக்கான மாற்றுண்டியல் ஒன்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

15 தீபதி அன் கம்பனிக்குச் சேரவேண்டிய தொகையைத் தீர்க்கும் பொருட்டு காசோலை ஒன்று வழங்கப்பட்டது.
பெற்ற கழிவீடு 8%

15 சிறு செலவுக் காசுச் செலவுக்கெனக் காசாக மீள நிரப்புதல்

17 காசு விற்பனைகள் ரூபா 35,000

22 கைவசம் நிலுவையாக ரூபா 6,000 காசை வைத்து கொண்ட பின்னர் காசு வங்கியில் இடப்பட்டது.

23 அமரதாச அத்துகோரல ஒப்பு கொண்ட உண்டியல்கள் ஆண்டுக்கு 24% வட்டிப்படி கழிவீடு செய்யப்பட்டன (தொகையானது காசாகப் பெறப்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27 சம்பளங்களும் கூலிகளும்

காசோலை மூலம் கொடுக்கப்பட்டது   ரூபா 4,400

~~காசாகக்~~ கொடுக்கப்பட்டது   ரூபா 24,000

30 சிறு செலவுக் காசுக் கொடுப்பனவுகள்

அஞ்சற் செலவு   ரூபா 200

விளம்பரம்   ரூபா 300

பின்வருவனவற்றை தயாரிக்கும் படி நீர் கேட்கப்படுகிறீர்

அ. முதற்பதிவேடுகள்

ஆ. பொதுப் பேரேட்டுக் கணக்குகள், விற்பனைப் பேரேட்டுக் கணக்குகள். கொ/வு பேரேட்டுக் கணக்குகள்

03 சுரேஷ் கீர்த்திசிங்க என்பவர் 1988 மே மாதம் 01 ஆந் திகதியன்று வங்கிக் கணக்கொன்றிலே ரூபா 600,000 ஆகிய தொகையை வைப்புச் செய்து வியாபாரமொன்றைத் தொடங்கினார். மே மாதத்தின் போது பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்தன.

03. 1988 மே

01 வியாபர நோக்கத்திற்காக வங்கியிலிருந்து ரூபா 4,500 ஆகிய தொகையை மீள எடுத்துக் கொண்டார்.

01 கீர்த்தி பண்டா என்பவரிடமிருந்து பகுதியளவில் பூர்த்தியான கட்டடமொன்றை (ரூபா 24,000) வாங்கினார்.

02 கட்டடத்தின் 50% கிரயக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

02 ரூபா 32,000 இற்குக் காசோலை மூலம் பணம் செலுத்தித் தளபாடம் வாங்கினார்.

02 புதிய கட்டடமொன்றை வாடகைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. முதலாம் காலாண்டு வாடகையாக ரூபா 2,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 காசோலை மூலம் பணம் செலுத்தி ரூபா 19,000 இற்குப் பொருள்கள் வாங்கினார்.

05 ரூபா 8,000 ஆன தொகைக்கு பிரியந்தா டெரேராவிடமிருந்தும் ரூபா 30,000 ஆன தொகைக்கு ரத்னா பர்ணாந்துவிடமிருந்து ரூபா 32,000 ஆகிய தொகைக்கு சார்ள்ஸ் இரத்னாயக்க என்பவரிடமிருந்தும் ரூபா 50,000 ஆன தொகைக்கு பிரபாத் மொலமுரே என்பவரிடமிருந்தும் கடனுக்கும் பொருள்களை வாங்கினார்.

08 சுரேஸ் கீர்த்தி சிங்கவினால் சுமதி இரத்னபால என்பவர் ஒரு பங்காளராகச் சேர்க்கப்பட்டார். சுமதி இரத்னபால நன்மதிப்டையும் பின்வரும் சொத்துகள் பொறுப்புகளையும் கொணர்ந்தார்.

| | | ரூபா | |
|---|---|---|---|
| வான் வண்டி | | 56,000 | |
| தளபாடம் | | 25,000 | |
| ~~கடன்பட்டோர்~~ | | 20,000 | |
| | R.Y நந்தன | | 10,000 |
| | T. சோமேஸ்வரன் | | 5,000 |
| ஏற்பாடு: | ஐயக்கடன்கள் | | 5,000 |
| | கடன்கொடுத்தோர் | | |
| | R.V நாதன் | | 20,000 |
| | G. இராகவன் | | 40,000 |
| | S. பசுபதி | | 10,000 |

நன்மதிப்பு 5 ஆண்டுகளுக்கான சராசரி இலாபத்தின் 03 ஆண்டுக் கொள்வனவின் மீது கணிக்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளுக்குமான இலாபங்கள் (நட்டம்) முறையே ரூபா 10,000 ரூபா 12,000 ரூபா 14,000 (ரூபா 10,000) ரூபா 12,000 ஆக இருந்தன. புதிய வியாபாரம் "சுரேஷ் அன்ட் சுமதி" எனப் பெயரிடப்பட்டது.

09 மோட்டார் வண்டி காசோலை மூலம் ரூபா 75,000 இற்கு வாங்கப்பட்டது.

10 மோட்டார் வாகனச் செலவுகளுக்கு ரூபா 500 காசாக செலுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 ரூபா 9,500 இற்கு துவன் கிச்சிலனுக்கும் ரூபா 25,000 இற்கு கௌரி சபாரத்தினத்திற்கும் ரூபா 10,000 இற்கு திலக் அரும்பெருவிற்கும் கடனுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

11 காசு விற்பனைகள் ரூபா 35,000

13 வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தின் சொந்தகாரருக்குமின் கட்டணக் கொடுப்பனவாக ரூபா 1,500 ஆகிய தொகைக்குக் காசோலை ஒன்று வழங்கப்பட்டது.

14 ரூபா 4,000 இற்கு பிரியந்த பெரேராவிடமிருந்தும் ரூபா 25,000 இற்கு சார்ள்ஸ் இரத்தினாயக்காவிடமிருந்து கடனுக்குப் பண்டங்கள் வாங்கப்பட்டன.

16 ரூபா 75,000 இற்கு துவன் கிச்சிலனுக்கும் ரூபா 4,000 இற்கு திலக் அரும்பெருமவிற்கும் கடனுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

19 கீர்த்திசிங்க தனது சொந்த உபயோகத்திற்கு ரூபா 7,000 ஆன தொகையை காசோலை மூலம் மீள எடுத்துக் கொண்டார்.

19 R.V நாதனிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையான ரூபா 10,000 தவறாக கடன் கொடுத்தோர் நிரலில் இடப்பட்டிருந்தமை வெளிப்பட்டது

1988 மே

22 துவன் கிச்சலனிடமிருந்து திலக் அரும்பெருமவிடமிருந்தும் அவர்களது கணக்குகளைத் தீர்க்குமுகமாக காசோலைகள் கிடைக்கப் பெற்றன. அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கழிவீடு 2% ஆகும்.

23 கிடைக்கப்பெற்ற காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டன.

24 கௌரி சபாரத்தினத்தினால் திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்கள் ரூபா 2,000 இற்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 பிரியந்த பெரேராவிற்கு ரூபா 500 இற்கும் சார்ள்ஸ் இரத்னாயக்காவிற்கு ரூபா 2,000 இற்கும் பண்டங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

27 2% கழிவீட்டை கழித்த பின்னர் காசோலைகளாகப் பணம் செலுத்தப்பட்டு பிரியந்த பெரேரா சார்ள்ஸ் இரத்னாயக்கா என்பவர்களின் கணக்குகள் தீர்க்கப்பட்டன.

28 மாதத்திற்கு ரூபா 3,500 ஆன கூலிகள் காசாக செலுத்தப்பட்டன.

29 கீர்த்திசிங்க தனது சொந்த உபயோகத்திற்கு ரூபா 600 எனும் தொகையான காசை மீள எடுத்துக்கொண்டார்.

**1988 மே மாதத்திற்குப் பின்வருவனவற்றை தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகிறீர்.**

அ. பொருத்தமான முதன்மைப் பதிவேடுகள்

ஆ. பேரேட்டுக் கணக்குகள்

இ. 1988 மே மாதம் 3 ஆந் திகதியன்று இருந்தபடி பரீட்சை மீதி

**கவனிக்க:-** ஏற்றுக் கொள்ளப்படும் வடிவ அமைப்புகளைப் பயன்படுத்துக.

04. 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ம் திகதியன்று ரணதுங்கா அவர்களின் சொத்துகளும் பொறுப்புகளும் பின்வருமாறு அமைந்திருந்தன.

| | | |
|---|---|---|
| கைவசமுள்ள காசு | | 21,200 |
| வங்கி நடைமுறை க/கு | | 260,000 |
| கடன்பட்டோர் | | |
| | முரளிதரன் | 90,000 |
| | அரவிந்தா | 66,000 |
| கையிருப்பில் உள்ள தொக்கு | | 320,000 |
| காணியும் கட்டடங்களும் | | 500,000 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | | 160,000 |
| மோட்டார் வான் | | 320,000 |
| கடன் கொடுத்தோர் | ஜெயசூரியா | 20,000 |
| | மகாநாம | 30,000 |

மார்ச் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995 மார்ச்

2 முரளிதரனுக்குக் கடன் அடிப்படையில் விற்ற பண்டங்கள்
200 மூடைகள் மிளகாய் ஒவ்வொன்றும் 1000 ரூபா வீதம்
100 மூடைகள் வெங்காயம் ஒவ்வொன்றும் 800 ரூபா வீதம்
150 பெட்டிகள் உருளைக்கிழங்கு ஒவ்வொன்றும் 90 ரூபா வீதம்
அனுமதிக்கப்பட்ட கழிவு 10%

3 ஜெயசூரியாவுக்கும், மகாநாமவுக்கும் சேர வேண்டிய தொகைகள் காசோலை மூலம் செலுத்தப்பட்டன பெற்ற கழிவீடு 4 சதவீதம் ஆகும்.

4 சில்லறை காசாளருக்கு முற்பணமாக 2,000 ரூபா காசு கொடுக்கப்பட்டது.

5 ஜெயசூரியவிடம் கடனுக்கு பெற்றது.
100 பெட்டிகள் உருளைக்கிழங்கு ஒவ்வொன்றும் 600 ரூபா வீதம்
200 மூடைகள் மிளகாய் ஒவ்வொன்றும் 600 ரூபா வீதம்
100 மூடைகள் வெங்காயம் ஒவ்வொன்றும் 400 ரூபா வீதம்
பெற்ற கழிவீடு 10 சதவீதம் ஆகும்.

6 தான் விற்ற பண்டங்களுக்காக ஜெயசூரியா மாற்றுண்டியல்களை வழங்கினார். அவை கம்பனியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

7 காசு விற்பனைகள் - 30,000

9 முரளிதரன் சேதமடைந்த பண்டங்களைத் திருப்பி அனுப்பினார். அவருக்கு 3,000 ரூபா கடன் அனுமதிப்பதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

10 சென்ற மாதத்திற்கான மின்சார உண்டியல் தொகையான 1,700 காசாகக் கொடுக்கப்பட்டது.

11 சில்லறை காசு செலவுகள்

| | | | |
|---|---|---|---|
| அனுப்புஞ்செலவு | - 400 ரூபா | அஞ்சற் செலவு | - 300 ரூபா |
| தந்திகள் | - 70 ரூபா | பொதி செய் செலவு | - 480 ரூபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 தளபாடம் வாங்கப்பட்டது அதற்கென 30,000 ரூபாய்க்கு காசோலை ஒன்று வழங்கப்பட்டது.

16 காசோலை ஒன்றை கொடுத்து முரளிதரன் தனது கணக்கைத் தீர்த்து கொண்டார் அனுமதிக்கப்பட்ட கழிவு 10 சதவீதமாகும்.

18 காசு விற்பனைகள் - 24,000

20 சொந்த செலவுக்காக 2,400 ரூபா காசு எடுக்கப்பட்டது.

22 5,000 ரூபா நிலுவையாக வைத்துக் கொண்டு எஞ்சிய பணம் வங்கியிற் வைப்புச் செய்யப்பட்டது.

25 6,000 ரூபாய் வாடகைப் பணம், காசோலை மூலம் செலுத்தப்பட்டது. வாடகைப்பணம் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

28 சில்லறைக் காசு செலவுகள்
எண்ணெய் : 80 ரூபாய் விளம்பரம் 500 ரூபாய்
இம் மாதத்திற்கான சில்லறைக் காசு செலவுகள் மீள நிரம்பல் செய்யப்பட்டன.

29 திரு. புஸ்பகுமார் ஒரு பங்காளராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவர் கொணர்ந்த சொத்துக்களும் பரிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பொறிவிருட்சம் பொறிகளும் | 300,000 |
| தளபாடம் | 138,000 |
| நன்மதிப்பு | 160,000 |
| பண்டங்கள் | 300,000 |
| வருமதியான உண்டியல்கள் | 80,000 |
| கொடுப்பனவு செய்தற்குரிய உண்டியல்கள் | 260,000 |

**நீர் பின்வருவனவற்றை தயாரிக்க வேண்டும்.**

1. முதன்மை பதிவு ஏடுகள்
2. பேரேடுகள்
3. 1990 மார்ச் 31 ஆம் திகதியன்று இருந்தவாறான பரீட்சை நிலுவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1990 Aug (1991 Spl)

1991 ஜனவரி 01 ஆந் திகதியன்று கோசல சகோதரர்கள் வியாபாரத்தாபனத்தின் கணக்கேடுகள் பின்வரும் மீதிகளைக் காட்டின.

| | | |
|---|---|---|
| வங்கி மேலதிக பற்று | | 157,000 |
| கைவசமுள்ள காசு | | 26,000 |
| கடன்பட்டோர் கணக்குகள் | | |
| | கம்லத் பரத | 36,000 |
| | சுமித் ரன்வல | 10,000 |
| காணியும் கட்டடங்களும் | | 450,000 |
| தளபாடமும் பொருத்திகளும் | | 125,000 |
| வியாபாரக் கையிருப்பு | | 450,000 |
| கடன்கொடுத்தோர் கணக்குகள் | | |
| | இராமச்சந்திரன் | 65,000 |
| | ஜமால் டீன் | 75,000 |
| மூலதனக் கணக்குகள் | | |
| | சுரேஸ் செல்வரத்தினம் | 200,000 |
| | ரணில் மானவசிங்க | 300,000 |
| | லக்கி லுணவில | 300,000 |

ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்த்தின திகதி.

01 கம்லத் பரத என்பவருக்கு கிலோகிராம் ஒன்று ரூபா 1,700/= படி 20 கிலோ கிராம் பண்டங்கள் கடனுக்கு விற்கப்பட்டன.

02 இராமச் சந்திரனுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை 10% கழிவீடு கழிக்கப்பட்டதன் பின்னர் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டது.

03 ஊழியரொருவரின் மருத்துவச் செலவுப் பட்டியலுக்குக் காசு ரூபா 1,650 செலுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 கடனுக்கு வாங்கனப்பட்ட பண்டங்கள் பின்வருமாறு
கிலோகிராம் ஒன்று ரூபா 1,200 படி மகேந்திரனிடமிருந்து 20 கிலோகிராம்
கிலோகிராம் ஒன்று ரூபா 1,100 படி ரண்பட்டாவிடமிருந்து 15 கிலோகிராம்
கிலோகிராம் ஒன்று ரூபா 1,300 படி ஜமால்டீனிடமிருந்து 25 கிலோகிராம்

05 ரண்பண்டா தான் விற்ற பண்டங்களிற்கு உண்டியல் ஒன்றை வரைந்தார். அது வியாபாரத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

07 கிலோகிராம் ஒன்று ரூபா 1,800/= படி 27 கிலோகிராம் பண்டங்கள் காசுக்கு விற்கப்பட்டன. அனுமதிக்கப்பட்ட கழிவீடு 5% ஆகும்.

08 முன்னைய தினம் கிடைத்த பணம் ரூபா 3,000 தவிர வங்கியில் இடப்பட்டது.

09 பழுதடைந்தவையாகத் திருப்பியனுப்பப்பட்ட பண்டங்கள் வருமாறு. மகேந்திரனுக்கு இரண்டு கிலோகிராம் ஜமால்டீனுக்கு நான்கு கிலோகிராம் ரண்பண்டாவுக்கு மூன்று கிலோகிராம்.

10 திருப்பியனுப்பிய பண்டங்களுக்காக கம்லத்பரதவிற்கு ரூபா 3,000/= ஆன தொகைக்கு செலவு தாள் ஒன்ற வழங்கப்பட்டது.

12 பங்காளர்கள் வியாபாரத்திற்கு மூலதனமாக பின்வரும் சொத்துகளை புகத்தினர்.

| | | | | |
|---|---|---|---|---|
| சுரேஸ் செல்வரத்தினம் | - | மோட்டார் வாகனம் | ரூபா | 75,000 |
| | | காசு | ரூபா | 75,000 |
| ரணில் மாளவசிங்க | - | மேசைகள் | ரூபா | 25,000 |
| | | காசு | ரூபா | 55,000 |
| லக்கி லுணவில | - | கதிரைகள் | ரூபா | 15,000 |
| | | காசு | ரூபா | 125,000 |

14 பங்காளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற காசு வங்கியில் இடப்பட்டது.

20 வியாபார கடன்பட்டோர் அனைவரும் தனது பட்டியல்களைச் செலுத்தினர். அவர்களுக்கு 5% கழிவு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 உபவாடகைக்கு விடப்பட்ட வளவிற்கு உபவாடகையாளரிடமிருந்து ரூபா 1,500 கிடைத்தது.

25 கடன்பட்டோரிடமிருந்து பெற்ற கொள்ளப்பட்ட பணம் வங்கியில் இடப்பட்டது.

26 வியாபார கடன் கொடுத்தோர் அனைவரிற்கும் காசோலைகள் வழங்குவதன் மூலம் முழுமையாகப் பணம் செலுத்தப்பட்டது. கிடைத்த கழிவீடு 10% ஆகும்.

28 பின்வரும் செலவுகளுக்கும் காசாகப் பணம் செலுத்தப்பட்டது.

| | |
|---|---|
| சம்பளங்கள் | 2,500 |
| கூலிகள் | 8,000 |
| காப்புறுதி | 500 |
| இறைகள் | 1,250 |
| நானாவிதச் செலவுகள் | 600 |

**பின்வருவனவற்றை நீர் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்.**

அ. முதறிலை (தொடக்க) ஏடுகளிலான பதிவுகள்.

ஆ. பேரேட்டுக் கணக்குகள்.

இ. காலப்பகுதியின் முடிவிலுள்ள பரீட்சைமீதி.

**1994 ஆகஸ்ட்**

**01.** அ. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் எந்த மூல ஆவணங்களிலிருந்து பதிவு செய்யப்படலாம்.

1. அலுவலக சாதனம் ஒன்றின் கொள்வனவு
2. பண்டங்களினதும் சேவைகளினதும் விற்பனை
3. கிடைக்கப் பெற்ற காசு
4. மாதத்திற்கான மொத்தச் சம்பளம்
5. செலுத்தப்பட்ட பின் கட்டணம்
6. வங்கிக் கட்டணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. வரையறுத்த இசுரு கம்பனியினால் பின்வரும் ஏடுகள் பேணப்பட்டு வருகின்றன.

மூலப்பதிவேடுகள்

விற்பனைகள், விற்பனைதிரும்பல்கள், கொள்வனவுகள், கொள்வனவு, திரும்பல்கள், காசேடு (பொருத்தமான பகுப்பாய்வு நிரல்களுடன்)

பொதுக்குறிப்பேடு

பேரேடுகள்

கடன்பட்டோர் பேரேடு, கடன்கொடுத்தோர் பேரேடு, பொதுப்பேரேடு (கட்டுப்பாட்டு கணக்குகள் உட்பட)

பின்வரும் உருப்படிக்களைப் பதிவு செய்யுமாறு நீர் கேட்கப்படுகின்றீர் உருப்படி ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கையாள்க.

உருப்படி 01- வரையறுத்த ரேணுகா கம்பனியிடமிருந்து சிரய பட்டியலொன்று கிடைத்துள்ளது. மொத்த தொகையான ரூபா 1,900 மீள் விற்பனைக்குரிய பண்டங்களுக்கான ரூபா1.150 அலுவலகத்தில் பயன்படுத்துவதற்குரிய புதிய தட்டச்சு பொறி ஒன்றிற்கான ரூபா 750 எனும் தொகைகளைக் கொண்டுள்ளது.

உருப்படி 02 - குறித்த ஒரு நாளில் வங்கியிலிடப்படவேண்டிய பணமானது காசு விற்பனைகளிலிருந்தான ரூபா 2,110 காமினி அன்ட் கம்பனியிடமிருந்து ரூபா 970 எனும் தொகைக்கு கிடைத்த காசோலை என்பவற்றைக் கொண்டிருந்தது இக் காசோலை காமினி அன்ட் கம்பனியினது ரூபா 1000 ஆகிய கணக்கின் முழுக் கொடுப்பனவாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருப்படி 03 - தீர்க்கப்படாத மூன்று கடன்பட்டோர் கணக்குகள் (கே. பாலசிங்கம் ரூபா 150 டி. தயாரத்ன ரூபா 60 கே. வில்ஸன் ரூபா 240) நுணுகி ஆராயப்பட்டன. தயாரத்னவின் கணக்கு திருப்பியனுப்பப்பட்ட பண்டங்களுக்கான ஒரு கோரிக்கையைக் குறித்து நிற்கிறது. இக் கோரிக்கையை அனுமதிப்பதற்கும் ஏனைய ஒரு கணக்குகளையும் அறவிடப்பட முடியாதவையாகப் பதிவழிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உருப்படி 04 - குறித்த ஒரு வாரத்திற்கான வேதனப்பட்டியல் பின்வருமாறு உள்ளது.

| | மொத்த வேதனம் ரூபா | தேசிய சேமிப்பு வங்கிக் கடன் தவணை கட்டணம் ரூபா | தேறிய வேதனம் ரூபா |
|---|---|---|---|
| களஞ்சியசாலை கூலிகள் | 3,160 | 350 | 2,810 |
| அலுவலகச் சம்பளங்கள் | 2,050 | 240 | 1,810 |
| | | | 4,620 |

கடன் மீதான கழித்தல்கள் தேசிய சேமிப்பு வங்கிக்குச் செலுத்தப்படாதிருந்தன.

**மேற்போந்த உருப்படிகள் ஒவ்வொன்று தொடர்பிலும் பின்வருவனவற்றைக் காட்டுக.**

1. பொருத்தமான நாளேடுகள், காசேடு, பொதுக்குறிப்பேடு என்பவற்றிலான பதிவுகளின் பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதிகள் (பொழிப்புகள்)

2. தாக்கத்திற்குட்பட்டுள்ள பொருத்தமான பேரேட்டு கணக்குகள் அனைத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. 1992 மார்ச் மாதத்திற்கு எஸ். எஸ். இராஜநாதன் என்பவரின் வியாபாரம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

1. காசேடு (பெறுவனவுப் பக்கம்)

| திகதி | விபரங்கள் | பக்கம் | அனுமதித்த கழிவு | காசு | வங்கி | பகுத்தாய்வு நிரல் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | நானாவித பெறுவனவுகள் |
| மார்ச் | | | | | | | |
| 01 | மீதி | | | | 100,000 | | |
| 02 | கிடைத்த தரகு கூலி | | | 800 | | | 800 |
| | காசு (வைப்புகள்) | எதிர்பதிவு | | | 800 | | |
| 04 | விற்பனைகள் | | | 1,700 | | | 1,700 |
| | எச். சுனில் | | 20 | 650 | | 650 | |
| | காசு(வைப்புகள்) | எதிர்பதிவு | | | 2,350 | | |
| 14 | விற்பனைகள் | | | 200 | | | 200 |
| | எஸ். குமார் | | 50 | 1,250 | | 1,250 | |
| | காச (வைப்புகள்) | எதிர்பதிவு | | | 1,450 | | |
| 18 | கிடைத்த தரகுகூலி | | | 1,050 | | | 1,050 |
| | காசு (வைப்புகள்) | எதிர்பதிவு | | | 1,050 | | |
| 21 | எம். தீபன் | | 50 | 900 | | 900 | |
| | காசு வைப்பு | எதிர்பதிவு | | | 900 | | |
| 31 | விற்பனைகள் | | | 1,000 | | | 1,000 |
| | எஸ். மொகமட் | | 40 | 1,500 | | 1,500 | |
| | காசு வைப்பு | எதிர்பதிவு | | | 2,500 | | |
| | | | 160 | 9050 | 109,050 | 4,300 | 4,750 |

02. விற்பனை நாளேடு

| திகதி | விபரங்கள் | தொகை |
|---|---|---|
| மார்ச் | | ரூபா |
| 3 | எஸ். மொகமட் | 1,500 |
| 10 | எச். சுனில் | 900 |
| 13 | ஏ. பர்னாந்து | 550 |
| 19 | எம். தீபன் | 800 |
| 20 | எஸ். குமார் | 1,250 |
| | | 5,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் இருந்த சொத்துகள் (வங்கி மீதி நீங்கலான)

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| கடன்பட்டோர் | எச். சுனில் | 670 |
| | எஸ். குமார் | 1,300 |
| | எம். தீபன் | 950 |
| | எல். மொகமட் | 1,540 |

04. மார்ச் மாதத்திற் செய்த கொடுப்பனவுகள் (கொடுப்பனவுகள் அனைத்தும் காசோலை மூலம் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| | ரூபா |
| காசு கொள்வனவுகள் | 8,000 |
| கூலிகள் | 2,000 |
| நானாவிதச் செலவுகள் | 350 |

05. மேலே நிரற்படுத்தப்பட்டவை தவிர வேறு கொடுக்கல் வாங்கல்கள் எவையும் மார்ச் மாதத்திற் செய்யப்படவில்லை.

**பின்வருவனவற்றை செய்யுமாறு நீர் கேட்கப்படுகிறீர்.**

அ. கடன்பட்டோர் பேரேட்டிலும் பொதுப்பேரேட்டிலும் பேரேட்டுக் கணக்குகளை (கட்டுப்பாட்டு கணக்கு உட்பட) திறந்து பொருத்தமான கணக்குகளில் மேலே தரப்பட்ட 1 2 3 4 எனும் பிரிவுகளிலுள்ள உருப்படிகளைப் பதிக.

**1995 ஆகஸ்ட்**

**03.** அ. தற்சமனாக்கும் பேரேடுகளுக்கும் பிரிவுகளுக்குரிய பேரேடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

ஆ. பின்வருவன எஸ். எஸ். சரத் அன்ட் கம்பனியின் 1995 ஜனவரி மாதத்திற்குரிய கடன்பட்டோர் பேரேட்டிலான கடன்பட்டோர் தொடக்க மீதிகளும் விற்பனை நாளேடு, விற்பனை திரும்பல் ஏடு காசேடு (பெறுவனவுகள் பக்கம்) ஆகியவற்றின் பொழிப்புமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கடன்பட்டோர் | கடன்பட்டோர் பேரேட்டின் படி ஜனவரி 01 ஆந் திகதியன்றிருந்த மீதி | விற்பனை நாளேட்டின் படி ஜனவரி மாதத்தில் கடன் விற்பனைகள் | விற்பனை திரும்பல்கள் ஏட்டின் படி ஜனவரி மாதத்தில் திரும்பிய பண்டங்கள் | ஜனவரி மாதத்திற்கான காசேடு (பெறுவனவு பக்கம்) | |
|---|---|---|---|---|---|
| | | | | அனுமதித்த கழிவீடு | கிடைத்த காசு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏ. அனில் | 2,100 | 1,700 | - | 60 | 2,040 |
| ஜி. கமகே | 1,800 | 3,200 | - | 50 | 1,750 |
| கே. கமல் | 4,200 | - | - | - | 1,000 |
| எஸ். லால் | 3,700 | 400 | 100 | - | - |
| எம். மாயா | 2,800 | - | - | - | - |
| பி. பாலத | 3,800 | 1,300 | 300 | 50 | 1,950 |
| ஆர். ருவான் | 400 | - | - | - | - |
| ஜே. ஜெயா | (300) செலவு | 1,800 | - | - | - |
| டபிள்யூ. வருணா | - | 300 | - | - | - |
| வை. யமுனா | - | 500 | 200 | - | - |
| | 18,500 | 9,200 | 600 | 180 | 7,620 |

## மேலதிக தகவல்கள்

| | | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| I. பொதுக் குறிப்பேட்டின் பிரித்தெடுத்த பகுதிகள் | | | |
| அ. வருமதி உண்டியல்கள் | வரவு | 1,500 | |
| ஜே. ஜெயா | | | 1,500 |
| (வருமதி உண்டியல்களின் பதிவு) | | | |
| ஆ. ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு | வரவு | 400 | |
| ஆர். ருவான் | | | 400 |
| (அறவிட முடியாக் கடன்களின் பதிவழிப்பு) | | | |

**பின்வருவனவற்றை தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகிறீர்.**

1. 1995 ஜனவரி 31 ஆந் திகதியன்று இருந்தபடி கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகளும் கடன்பட்டோர் மீதிகளின் ஒரு பட்டோலையும்.

2. பொதுப் பேரேட்டிலான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. சில்லறை வியாபாரியான பீ. சுனிலின் பேரேட்டில் 1997.01.01 ஆந் திகதி இருந்தபடி பின்வரும் சொத்துகளும் பொறுப்புக்களும் காணப்பட்டன.

| | | ரூபா |
|---|---|---|
| சொத்துகள்: | காசு | 12,000 |
| | தொக்கு | 8,000 |
| | கட்டிடங்கள் | 30,000 |
| | அலுவலகத் தளபாடம் | 15,000 |
| கடன்பட்டோர்: | எஸ். பெரேரா | 750 |
| | லால் கம்பனி | 1,800 |
| பொறுப்புகள் கடன் கொடுத்தோர் | | |
| | டி. லலித் | 460 |
| | எச். குமார் | 1,300 |

ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வரும் மூல ஆவணங்களை உருவாக்கின.

| விற்பனைப் பட்டியல் | ரூபா | விநியோகத்தர்களின் பட்டியல் | ரூபா |
|---|---|---|---|
| 001 ஜனவரி 3 அ. பாலா | 750 | ஜனவரி 5 டி. லலித - பண்டங்கள் | 1,800 |
| 002 ஜனவரி 3 எஸ். பெரேரா | 1,500 | ஜனவரி 16 எம். மானெல் (அலுவலக எழுது பண்டங்கள்) | 500 |
| 003 ஜனவரி 4 பி. குணபாலா | 2,500 | ஜனவரி 20 எச். குமார - பண்டங்கள் | 800 |
| 004 ஜனவரி 10 லால். அன் கம்பனி | 5,000 | ஜனவரி 25 ரெலிக் கம்பனி (தொலைபேசி கட்டணம்) | 1,200 |
| | | ஜனவரி 30 அ. பாலா - (பண்டங்கள்) | 1,500 |

| காசுப் பெறுவனவுகள் | ரூபா | வழங்கப்பட்ட காசோலைகள் இலக்கம் | ரூபா |
|---|---|---|---|
| 101 ஜனவரி 3 எஸ். பெரேரா | 750 | 1112 ஜனவரி 5 கூலிகள் | 3,000 |
| 102 ஜனவரி 20 லால் அன் கோ | 3,000 | 1113 ஜனவரி 8 காசு கொள்வனவு | 500 |
| 103 ஜனவரி 22 காசு விற்பனை | 2,000 | 1114 ஜனவரி 10 டி. லலித | 460 |
| 104 ஜனவரி 25 அலுவலக பழைய தட்டச்சு எந்திர விற்பனை | 3,000 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வழங்கப்பட்ட கொடுகடன் நாள் | ரூபா |
|---|---|
| 222 ஜனவரி 4 அ. பாலா | 250 |
| 223 ஜனவரி 16 பி. குணபால | 500 |

பின்வருவனவற்றை நீர் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகிறீர்.

1. பி. சுனிலின் கணக்கு ஏடுகளை ஆரம்பிப்பதற்கு பொது நாட்குறிப்பு பதிவொன்றைத் தயாரிக்குக.

2. மேற் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை நாளேடுகளிலும் காசேடுகளிலும் பதிவு செய்வதோடு பேரேட்டிலும் அவற்றைப் பதிவு செய்க.

**1996 ஆகஸ்ட்**

**05.** ஒரு தனியுடமையாகிய மோகன் முயற்சியாண்மை என்ற நிறுவனத்தின் பொதுப்பேரேடு 1995 டிசம்பர் 31 இல் பின்வரும் கணக்குகளைக் கொண்டிருந்தன.

| | ரூபா |
|---|---|
| கையிருப்புக் கணக்கு | 36,000 |
| தளபாட கணக்கு | 17,000 |
| மூலதனக் கணக்கு | 63,000 |
| வங்கி கணக்கு - மேலதிகப்பற்று | 3,000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு | 19,000 |
| கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | 6,000 |

1996 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்தன.
காசு கொடுக்கல் வாங்கல்கள்

| | | | |
|---|---|---|---|
| பெறுவனவுகள் | காசு விற்பனைகள் | ரூபா | 6,000 |
| | கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு | ரூபா | 12,000 |
| கொடுப்பனவுகள்:- | காசு கொள்வனவுகள் | ரூபா | 6,000 |
| | வரைபுகள் (பற்றுக்கள்) | ரூபா | 1,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பொதுச் செலவுகள் | ரூபா | 3,200 |
| கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு | ரூபா | 3,000 |
| கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் | ரூபா | 2,000 |

| | | | |
|---|---|---|---|
| காசுக் கழிவுகள் : | கடன்பட்டோருக்கென அனுமதிக்கப்பட்டது | ரூபா | 100 |
| | கடன் கொடுத்தோரிடமிருந்து பெறப்பட்டது | ரூபா | 80 |

பெறுவனவுகள் யாவும் வங்கியில் வைப்பு செய்யப்பட்டன.
கொடுப்பனவுகள் காசோலை மூலம் செலுத்தப்பட்டன.

**செலவு கொடுக்கல் வாங்கல்கள்**

விற்பனை நாளேட்டு மொத்தம் ரூபா 4,900 கொள்வனவு நாளேட்டு மொத்தம் ரூபா 4,200

**பொது நாட்குறிப்பேடு பதிவுகள்**

i. சொந்த பயன்பாட்டிற்காகக் கிரயத்தில் எடுக்கப்பட்ட கையிருப்பு ரூபா 1,600

ii. கடன்பட்டோரின் பேரேட்டிலிருந்து கடன் கொடுத்தோரின் பேரேட்டிற்கு மாற்றப்பட்ட வரவு மீதி ரூபா 300

**பின்வருவனவற்றை செய்க.**

அ. அவசியமான பேரேட்டு கணக்குகளைத் திறந்து மேலே குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யவும்.

ஆ. கணக்குகளை சமப்படுத்தி 1996 ஜனவரி 31 இல் இருந்தவாறான பரீட்சை மீதியை தயாரிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lotusse Academy**
257, Jampetta St.
Colombo - 13.

**Lever Pool Academy**
40/8, Dharmarama Road,
Colombo - 06.

**C.C.A**
Vavuniya

**M.I.S**
Negambo

**K. Sri B. Com (Hons)**

**Kadds Publications**
No, 521/3, Galle Road,
Colombo - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org